# வெற்றிடங்கள்

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

## இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனம் (SLSI)

### விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

### உதவி பணிப்பாளர் - இடைநிலை முகாமைத்துவ பிரிவு (MM 1-1)

## உதவி பணிப்பாளர் (தொழில்நுட்பம்)

**தகைமைகள்**

**வெளிவாரி**

விஞ்ஞானத் துறையில் இளமாணிப் பட்டம் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொதுவான பட்டம் (3 ஆண்டுகள்).

**அத்துடன்**

தொடர்புடைய பதவியில் ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்
(விஞ்ஞானத் துறையில் பின்வரும் பாடங்களில் ஒன்று இருத்தல் வேண்டும்; பௌதீகவியல், இரசாயனவியல், உணவு விஞ்ஞானம், ஆடை, நுண்ணுயிரியல், சுற்றுச்சூழல் விஞ்ஞானம், மீன்பிடி, விவசாயம், உயிரியல், உயிர் தொழில்நுட்பவியல், மூலக்கூறு உயிரியல், கணிதவியல், அல்லது புள்ளிவிபரவியல்)

**உள்ளக (கீழுள்ள 01 அல்லது 02)**

01) மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கான தகைமைகளை பெற்றிருத்தல்.
02) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

## உதவி பணிப்பாளர் (பொறியியல்)

**தகைமைகள்**

**வெளிவாரி**

பதவிக்கு தொடர்புடைய இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் இளமாணி பட்டம் (4 ஆண்டுகள்)

**அத்துடன்**

பதவிக்கு தொடர்புடைய துறையில் ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக (கீழுள்ள 01 அல்லது 02)**

01) மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கான தகைமைகளை பெற்றிருத்தல்.
02) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**தேர்வு முறை**

எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை
இந்த பரீட்சையானது கீழ் தரப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக இரு பாகங்களைக் கொண்ட ஒரு வினாத்தாளை (3 மணி நேரம்) உடையதாகும்.

- ஆங்கில மொழி தேர்ச்சி
- உளச்சார்புச் சோதனை

**மற்றது**

அனைத்து விண்ணப்பதாரர்களும்

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவிக்கு உரிய பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : இ.ரூபா 53,175.00 – 16 x 1,375.00 - இ.ரூபா 75,175.00

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**ஏனைய நன்மைகள்**

1. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறையை பணமாக்கல்
2. ஆயுள் காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம்
3. ஒரு வரம்புக்கு உட்பட்டதாக மருத்துவ செலவுகளை மீளளித்தல்
4. பொது திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு
5. தொழில்முறை சூழல் ஒன்றில் பணியாற்றும் சந்தர்ப்பம்
6. தொடர்பாடல் கொடுப்பனவு

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் முழுப் பெயர், வயது, கல்வித் தகைமைகள் மற்றும் வேறு ஏனைய தொடர்புடைய விடயங்களை குறிப்பிட்ட விண்ணப்பங்களை சான்றிதழ்களின் பிரதிகளுடன் இணைத்து **2025.02.10 ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னர் **பணிப்பாளர் நாயகம், இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அரச துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.


**பணிப்பாளர் நாயகம்**

**இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனம்**

**தொ.: 011 2671567 - 72**